**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.952/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | பாலகிருஷ்ணன், வயது 65 |
| Father Name/Husband Name | : | சின்னபெருமாள் |
| Village | : | பீக்கிலிபட்டி |
| Taluk | : | எட்டயபுரம் |
| Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of March 2026.

**(Accused present.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பீக்கிலிபட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது தம்பி மகன். கடந்த 11.05.2025 ஆம் தேதி காலை 07.15 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் ஆட்டு தொழுவத்தை கழுவி கொண்டிருந்தேன். அப்போது எனது மனைவி ஆவுடையம்மாள் கழுவி தண்ணீர் எடுத்து கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி ராஜ்குமார் எனது மனைவியை கீழே தள்ளிவிட்டு கம்பால் இடுப்பில் அடித்தார். அப்போது ஏன் இவ்வாறு அடிக்கிறாய் என்று நான் கேட்டதற்கு என்னை தள்ளிவிட்டு கல்லால் அடித்து பின்னர் செருப்பை கொண்டு என் மீது எறிந்தார்.

2. இதில் நானும், எனது மனைவியும் அடிப்பட்டு காயத்தோடு இருந்தபோது ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எங்களை கொண்டு சென்றார்கள். அரசு மருத்துவமனையில் எங்களுக்கு சிகிச்சை நடந்தது. நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது நாலாட்டின்புதூர் காவல் நிலைய போலீசார் எங்களிடமிருந்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3. பாலமுருகன் எனது மகன். அன்னலட்சுமி எனது மருமகள். எதிரிக்கும், எனக்கும் சொத்து பிரிப்பதில் பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல,

எதிரியின் தந்தை இருக்கும்போதே நாங்கள் சொத்தை பிரித்துவிட்டோம். எதிரியின் தோட்டத்தில் அவர் இல்லாதபோது நான் ஆடு, மாடு மேய்த்து பருத்தி பறித்தால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரிக்கும் அடிப்பட்டு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரியல்ல. எதிரியே கையை அறுத்துவிட்டு புகார் கொடுத்தார்.

4. எதிரிக்கு இடது முன்கையில் வெட்டுக்காயமும், தலையிலும், நெற்றியிலும் கல்லாலும், கம்பாலும் அடித்த வெட்டுக்காயமும் இருந்தது என்றால் சரியல்ல. கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் நான் ஒரு பெட்டிலும், எதிரி வேற பெட்டிலும் அனுமதிக்கபட்டிருந்தோம் என்றால் சரிதான். என்னிடம் வாக்குமூலம் பெறும்போது எதிரியிடமும் போலீசார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது மகள் கணபதியோட மகன்தான் விஜயகுமார் என்றால் சரிதான். எனக்கு பெருமாள் என்ற மகள் கிடையாது அவள் பெயர் ஜான்சிராணி. மதன்குமார் என்பவர் மேற்படி ஜான்சிராணியின் மகன்.

5. 12.05.2025 அன்று இரவு மேற்படி விஜயகுமார் மற்றும் மதன்குமார் என்னை கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தார்களா என்றால் பார்த்து சென்றுவிட்டார்கள். அப்போது மேற்படி விஜயகுமார் மற்றும் மதன்குமார் எதிரியை மேற்படி மருத்துவமனையில் வைத்து அடித்து காயப்படுத்தினார்களா என்றால் எனக்கு தெரியாது. அப்போது அது சம்பந்தமாக போலீசார் உங்களை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. அது சம்பந்தமாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் ஒரு நாள்தான் இருந்தேன் என்றால் நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் 108 ஆம்புலன்ஸில் வருவதற்கு பெரிய காயங்கள் கிடையாது என்றால் சரியல்ல, என்னால் நடக்க முடியவில்லை.

6. நான் மற்றும் எனது குடும்பத்தார்கள்தான் எதிரியை அரிவாளால் வெட்டி தாக்கிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாரில் என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்தார்கள் என்றால் நான் தாக்கப்பட்டு கீழே கிடந்ததால் எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது நானும், ஆவுடையம்மாள் தவிர வேற யாரும் இல்லை என்றால் சரிதான்.

7. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரி எனது மனைவியை கீழே தள்ளிவிட்டு கம்பால் அடிக்கவில்லை என்றாலும், அதை கேட்டதற்கு எதிரி என்னை கல்லால் அடித்து, செருப்பை கொண்டு எறியவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல் புகார்வாக்குமூலம் மருத்துவமனையில் வைத்து கொடுக்கபடவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் போலீசார் எத்தனை பக்கங்களில் உங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் என்னிடம் ஒரே கையொப்பம்தான் வாங்கினார்கள். போலீசார் உங்களை தவிர்த்து வேறு நபரிடம் மருத்துவமனையில் வைத்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் எழுதின ஒரு பேப்பரிலும், எழுதாத ஒரு பேப்பரிலும் என்னிடம கையொப்பம் வாங்கினார்கள்.

8. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் போலீசார் எழுதிதான் கையொப்பம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் வெற்று பேப்பரில் நான் கையொப்பம் செய்ததது வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது மயக்கம் தெளிய எனக்கு ஒரு நாள் ஆனது. நான் மயக்கத்தில் இருந்த சமயத்தில் போலீசுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரி தகவல் கொடுத்துதான் போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். ( **சாட்சி தற்போது இல்லை என்று கூறுகிறார்**). மேற்படி புகார் வாக்குமூலம் பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி என்மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்வதிலிருந்து தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.